**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 5/2017**

**Deposition of Witnesses for PW5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராஜ்குமார் சாமுவேல் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.11.2025

**எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**(சாட்சி காணொளிகாட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)**

முதல் விசாரணை

நான் தற்போது திவிர குற்றவாளிகள் தடுப்பு பிரிவு தெற்கு தேனாம்பேட்டையில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2015 ம் தேதி தேவிப்பட்டினம் காவல் ஆய்வாளர் பொறுப்பு கேணிக்கரை காவல் நிலைய ஆய்வாளராக நான் பணி செய்தேன். 11.12.2015 ம் தேதி இரவு 20.30 மணிக்கு எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி நான் கேணிக்கரை சார்பு ஆய்வாளர் கணேசன் வீரபாண்டி மு.நிகாவலர்கள் ரவிசந்திரன், மோகன், ஆகியோர்களுடன் இராமநாதபுரம் ECR ரோட்டில் உள்ள பட்டினம் காத்தான் சோதனை சாவடி அருகே வாகனத்தணிக்கை செய்யும் போது இராமேஸ்வரத்தில் இருந்து ராமநாதபுரம் நோக்கி வந்த TN 65 L 0068 என்ற எண்ணுள்ள Tata manza காரை நிறுத்தி சோதனை செய்த போது அந்த வாகனத்தில் வந்த நபர் வாகனத்தை விட்டு இறங்கி தப்ப முயன்று சோதனை சாவடி அருகே

உள்ள சுற்று சுவரில் ஏறி குதித்தபோது நிலைதடுமாறி கிழே விழுந்ததில் அவரின் இரண்டு முழங்கால்களில் வீக்க காயம் ஏற்பட்டது. அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை செய்ததில் அவர் பெயர் செல்வக்குமார் என்றும் வயது 32 என்றும் த/பெ ராமு, கிழக்கு கடைத்தெரு , ராமேஸ்வரம் என்று கூறினார். அவர் ஓட்டி வந்த வாகனத்தை சோதனை செய்ததில் காரின் முன்பக்க சீட்டின் அருகில் 5 கிலோ கஞ்சா பொட்டலமும் ரூ 14,500 /- மற்றும் 7 செல்போன்கள் வைத்திருந்தார் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்கு கைது செய்து என்னால் வரவழைக்கப்பட்ட வருவாய்துறை சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் தாகிர் அலி , கிராம உதவியாளர் ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். அதில் எதிரிகள் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். கைப்பற்றிய கஞ்சாவில் இருந்து தலா 25 கிராம் வீதம் 50 கிராம் மாதிரிக்காக எடுத்தும் மேற்படி சொத்துக்களை அத்தாட்சி தயார் செய்து சாட்சிகள் முன்னிலையில் சொத்துக்களை கைப்பற்றினேன். எதிரியை காயம் ஏற்பட்டதால் இராமநாதபுரம் அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்று வெளி நோயாளியாக சிகிச்சை பின்பு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட தடய சொத்துகளுடன் 23.00 மணிக்கு கேணிக்கரை காவல் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 536/2015 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) , 25 of NDPS Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சார்பு ஆய்வாளர் கணேசன் வீரபாண்டி மு.நி.காவலர்கள் ரவிசந்திரன், மோகன், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான வருவாய்துறை சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர்

தாகிர் அலி , கிராம உதவியாளர் ராமமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை நீதித்துறை நடுவர் முன்பு ஒப்படைத்தேன். படிவம் 95 **அ.த.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விடுப்பில் சென்றிருந்த கேணிக்கரை காவல் ஆய்வாளர் வந்ததினால் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஒப்படைத்தேன். எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள கஞ்சா 4.450 கி.கி **சா.பொ 1** ஆகவும் மாதிரி கஞ்சா எண்ணிக்கை 2 **சா.பொ 2 ,3** ஆகவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட TN 65 L 0068 என்ற எண்ணுள்ள Tata manza என்ற கார் **சா.பொ 4**ஆகவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ 14,500/- **சா.பொ 5** ஆகவும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 7 செல்போன்கள் **சா.பொ 6 முதல் 12** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை

Taken down by me in open court
read over to the witness through VC and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai